24th January 1961]

**SRI K. R. NALLASIVAM :** மொத்தமாக சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பிரித்துக் கொடுத்து பட்டா கொடுப்பது எந்த அளவில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU :As it is, there are 45 sites available, of which 6 sites are given to the school building. As already stated by me, there are 50 applications. For the others, some adjacent land is being looked for.

*Lower Bhavani Area*

* **144 *Q.*—SRI K. R. NALLASIVAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கீழ்பவானிப் பாசனப் பகுதிக்குள் ஆயக்கட்டில் சேராத நிலங்களை ஆயக்கட்டில் சேர்ப்பது என்ன நிலையிலுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : The Executive Engineer, Lower Bhavani Project Cannals Division, is taking action, on receipt of application from the ryots, to include, in the Lower Bhavani Project ayacut, such of the lands as were originally excluded owing to the unwillingness of the ryots but are so situate that the project water enters them either by percolation or by direct flow and/or are surrounded on all sides by the included block. The inclusion of the other lands which were excluded due to unwillingness of the ryots or due to extension of project ayacut to Dharapuram and Karur taluks will be considered after watching the development of the ayacut and the supply position for some years.

**SRI K. R. NALLASIVAM :** ஆயக்கட்டுப் பகுதியில் இருக்கக் கூடிய பகுதிகளில் நீர்க்கசிவுத் தண்ணீரை எடுத்துப் பாய்ச்ச சிறு சிறு திட்டங்கள் போடப்பட்டும் இன்னும் செய்யப் படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளை ஆயக்கட்டில் சேர்த்து போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவார்களா ?

**THE HON. SRI P. KAKKAN :** கசிவினால் வரும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தத்தான் அப்பர் காளிங்கராயன் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும் போது இதையெல்லாம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல என்று நினைக்கிறேன். இதிலே நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும் என்றுதான் பரிசீலனைசெய்து கொண்டிருக்கிறோம்.

**SRI K. R. NALLASIVAM :** அப்பர் காளிங்கராயன் திட்டம் என்பது கீழ் பவானி கடைக் கோடியில் வரும் பகுதிகளுக்கான திட்டம். மேல் கோடியில் பயன்படுவதற்கு நீர்க் கசிவுத் தண்ணீரைப் பயன்படுத்தி சிறு வாய்க்கால் ஏற்படுத்த வேண்டு மென்று சொல்லப்பட்டது. அதை நிறைவேற்ற சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**THE HON. SRI P. KAKKAN :** அதைப்பற்றிய பரிசீலனை செய்ய முயற்சி செய்யலாம்.

[24th January 1961

SRI P. G. MANICKAM : ஈரோடு தாலுக்காவில் இருக்கின்ற எல்லிஸ்பேட்டையில் 200 ஏக்கர் பகுதி பாசனப் பகுதியில் சேர்ந்திருக்கிறது. அதற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று இரண்டொரு எம்.எல்.ஏ.-க்கள்கூட அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறோம். அமைச்சரும் கீழேயுள்ள ஆபீசர்களுக்குத் தெரிவித்திருப்பார்களென்று நினைக்கிறேன். இன்னும் தண்ணீர் வசதி கிடைக்காததால், அதற்கான நடவடிக்கைகளை எடுத்து தக்க உத்திரவைப் பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லும் இடம் மட்டுமல்ல. அநேக இடங்களில் பல விவசாயப் பெரு மக்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

## *Drugs*

* 145 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் ஆல்கஹால் சம்பந்தப்பட்ட மருந்து முதலிய பானங்கள் விற்றதற்காக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன ?

(இ) அவைகளில் எத்தனை பேருக்கு இதுவரை தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றது, ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The particulars are as follows districtwise:—

| Name of the district. | Number of prosecutions so far launched during the year 1960 for the offence of selling medicinal and other preparations containing alcohol as drinks. | Number of persons sentenced so far out of these. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Kanyakumari .. .. | 1 | .. |
| 2 Thanjavur .. .. .. | 5 | 4 |
| 3 Madurai, North .. .. | 5 | 2 |
| 4 Madurai Urban .. .. | 1 | 1 |
| 5 Madras City .. .. | 42 | 31 |
| 6 Other districts .. .. | Nil. | Nil. |

SRI A. VEDARATHNAM : ஸார், சிகிச்சைக்கு ஆல்கஹால் எந்த மருந்துக்கும் உபயோகப்படுவதில்லை, ஆனால் மருந்துகளை ப்ரிசர்வ் செய்யத்தான் தேவையாக இருக்கிறது என்று நிபுணர்கள்—சர்ஜன்-ஜெனரல் போன்றவர்கள்—கூறி வருகிறார்கள்.